DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.105/2023

Prosecution witness – PW 6

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. முருகதாசன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)
05.03.2026 at 01.50 P.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் கடந்த 2023ம் ஆண்டு சிக்கல், வாலிநோக்கம் காவல் நிலைய வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அந்த சமயத்தில் வாலிநோக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக திரு.ராஜேந்திரன் என்பவர் பணிபுரிந்து வந்தார். தற்போது அவர் கீழக்கரை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். அவருக்கு பணிச்சுமை காரணத்தினால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரவில்லை. அவர் கையொப்பம் நன்கு தெரியும். எனவே அவர் சார்பாகவும் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 09.03.2023ம் தேதி 13.10 மணிக்கு வாலிநோக்கம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் நிலையப்பொறுப்பில் இருந்த போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அதே தினம் 14.30 மணிக்கு அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வீரன் என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் அவருடைய மனைவியான உமையாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 17.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 20/2023 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச வழக்காக பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

4. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட வீரன் என்பவர் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச என்பதனை 279,

304(A) இதச வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.

5. அன்றே இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.03.2023ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வையிட்டு சம்பவ சாட்சிகளான குணசேகரன், சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகும். மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன்.

6. சம்பவ சாட்சிகளான உமையாள், தங்கம், வடிவேல், அரசபாண்டியன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் செய்து செய்தேன்.

7. பின்னர் அன்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று அங்கு சவ கிடங்கில் வைக்கப்பட்டிருந்த வழக்கில் இறந்துபோன வீரன் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 10.03.2023ம்தேதி காலை 08.00 மணிமுதல் 10.00 மணி வரை பார்வையிட்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.

8. பின்னர் நிலைய இரண்டாம் நிலைக்காவலர் 1143 திரு.கிசோக்குமார் என்பவரை பிரேத பரிசோதனைக்காக அலுவலாக அனுப்பி வைத்து இறந்தவரின் பிரேத்தை பிரேத பரிசோதனை முடித்து இறந்தவரின் பிரேதத்தை நல்லடக்கம் செய்ய அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

9. பின்னர் 10.03.2023ம் தேதி எதிரியான அகமது என்பவரை வாலிநோக்கம் விலக்கு ரோட்டில் வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்தேன்.

10. பின்னர் 20.03.2023ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பத்மபிரியா என்பவருக்கு இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனமான TN 65 AV 7269 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்வு செய்யும் படி வேண்டுகோள் கடிதம்கொடுத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ,சா.ஆ.9 ஆகும். மோட்டர் வாகன ஆய்வாளர் திருமதி.பத்மபிரியா என்பவரை கடந்த 07.06.2023ந் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

11. பின்னர் 07.06.2023 ம் தேதி வழக்கில் இறந்து போன வீரன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. அருள்மோகன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும்.

12. பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்

13. பின்னர் அத்துடன் வழக்கின் விசாரணை முடித்து நடந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவு 279, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

14. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினம் நான் எந்த காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சிக்கல் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். சிக்கல், வாலிநோக்கம் காவல் நிலையங்களில் பணிபுரிந்த காவல் அதிகாரிகளின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் புகார் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கையெழுத்து யாருடையது என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரனுடையது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எத்தனை மணிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் 09.03.2023 ம்தேதி மாலை 18.00 மணிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் சம்பவ இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் 09.03.2023 ம் தேதி 19.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் என்னுடன் காவலர்கள் யாராவது வந்தார்களா என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் வந்தார்கள்.

15. சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாராவது இருந்தார்களா என்றால் பார்வை மகஜர் சாட்சிகளான குணசேகரன் மற்றும் சதாசிவம் இருந்தார்கள். அவர்களை தவிர வேறு யாராவது தனிநபர்கள் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் இடத்தில் தடயங்கள் எதையாவது கைப்பற்றினேனா என்றால் எதுவும் இல்லை. இறந்த வீரனின் இருசக்கர வாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழககில் அ.சா.1 ஐ புகார்தாரரை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 09.03.2023 ம் தேதி மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தேன். அதற்கு பின் அ.சா.1 ஐ நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 நான் விசாரிக்கும் போது குட்டியானை வந்த வாகனம் எனது கணவர் சென்ற சைக்கிளில் மோதியதாக கூறினாரான என்றால் இல்லை. அ.சா.2 ஐ விசாரிக்கும்போது பெட்ரோல் ஏற்றி வந்த வாகனம் தான் அ.சா.1ன் மீது மோதியதாக கூறியுள்ளரா என்றால் இல்லை. வடிவேலுவையும் விசாரிக்கும்போது பெட்ரோல் ஏற்றி வந்த வாகனம் தான் அ.சா.1ன் மீது மோதியதாக கூறியுள்ளரா என்றால் இல்லை. என்னுடைய விசாரணையில் அ.சா.2, அ.சா.3 மோதிய வாகனம் 10 நிமிடங்கள் சம்பவ இடத்தில் நின்று சென்றதாக கூறியுள்ளார்களா என்றால் இல்லை.

16. வடிவேல் என்னுடைய விசாரணையில் வடிவேலுவின் அண்ணன் தான் வீரனின் மனைவிக்கு போன் மூலம் தகவல் சொன்னதாக கூறியுள்ளரா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகில் கிருஷ்ணாபுரம் விலக்கு ரோடு உள்ளதா என்றால் சரிதான். இறந்த நபர் அவருடைய ஊருக்கு செல்ல வேண்டுமெனில் கிருஷ்ணாபுரம் விலக்கு ரோட்டை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ரோட்டின் மையப்பகுதி என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் வீரன் சாலையின் மேற்குபக்கமாக வந்து அவருடைய ஊருக்கு செல்வதற்காக வலது பக்கமாக திரும்பினார் என்றால் சரிதான். இறந்து போன வீரன் பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காமல் கவனக்குறைவாக திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் அ.சா.2, அ.சா.3 நபர்கள் ஒரே இருசக்கர வாகனத்தில் கும்பலாக வந்தார்களா என்றால் எங்களது இருசக்கர வாகனம் என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார்கள். மொத்தம் எத்தனை நபர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக என்னுடைய விசாாணையில் தெரியவந்ததா என்றால் அ.சா.2, அ.சா.3. என்னுடைய விசாரணையில் அ.சா.4 அரசபாண்டி எல்.ஐ.சி முகவராக வேலை பார்க்கிறார் என்று கூறியுள்ளரா என்றால் இல்லை.

17. அ.சா.4 என்னுடைய விசாரணையில் பொலிரோ பெட்ரோல் கொண்டு செல்லும நான்கு சக்கர வாகனம் அதிவேமகாக வந்து இறந்த நபர் மீது மோதியதாக கூறியுள்ளரா என்றால் இல்லை. வாகனத்தின் எண்ணை குறிப்பிட்டு தான் கூறியுள்ளார். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் கவனக்குறைவாக அவருக்கு ஊருக்கு திரும்பும் போது பின்னால் வந்த அடையாளம்

தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரர் இழப்பீடு பெற வேண்டி கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:43:21 +0530